12th Std Full Test Question

12th Standard

Date : 11-Jan-19

# கணிதம்

Reg.No. :

Time : 02:30:00 Hrs

Total Marks : 90

## மிகவும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து, குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக : 20 x 1 = 20

1) $ae^x + be^y = c$ ; $pe^x + qe^y = d$ மற்றும் $\Delta_1 = \begin{vmatrix} a & b \\ p & q \end{vmatrix}; \Delta_2 = \begin{vmatrix} c & b \\ d & q \end{vmatrix}; \Delta_3 = \begin{vmatrix} a & c \\ p & d \end{vmatrix}$ எனில் $(x, y)$ இன் மதிப்பு

(a) $\left(\frac{\Delta_2}{\Delta_1}, \frac{\Delta_3}{\Delta_1}\right)$ (b) $\left(log\frac{\Delta_2}{\Delta_1}, log\frac{\Delta_3}{\Delta_1}\right)$ (c) $\left(log\frac{\Delta_1}{\Delta_3}, log\frac{\Delta_1}{\Delta_2}\right)$ (d) $\left(log\frac{\Delta_1}{\Delta_2}, log\frac{\Delta_1}{\Delta_3}\right)$

2) **A** மற்றும் **B** என்ற அணிகள் பெருக்கலுக்கு உகந்தவையாயின் $(AB)^T$ =

(a) $A^TB^T$ (b) $B^TA^T$ (c) $AB$ (d) $BA$

3) $\frac{x-1}{2} = \frac{y-2}{3} = \frac{z-3}{4}$ மற்றும் $\frac{x-2}{3} = \frac{x-4}{4} = z - 5$ என்ற கோடுகளுக்கு இடையேயுள்ள மிகக்குறைந்த தொலைவு

(a) $\frac{2}{\sqrt{3}}$ (b) $\frac{1}{\sqrt{6}}$ (c) $\frac{2}{3}$ (d) $\frac{1}{2\sqrt{6}}$

4) $\left|2\bar{r} + (3\vec{i} - \vec{j} + 4\vec{k})\right| = 4$ என்ற கோளத்தின் மையம் மற்றும் ஆரம்

(a) $\left(\frac{-3}{2}, \frac{1}{2}, -2\right), 4$ (b) $\left(\frac{-3}{2}, \frac{1}{2}, -2\right)^{\text{and}} 2$ (c) $\left(\frac{-3}{2}, \frac{1}{2}, -2\right), 6$ (d) $\left(\frac{-3}{2}, \frac{1}{2}, -2\right)^{\text{and}} 5$

5) $Z$ ஒரு பூஜ்யமற்ற கலப்பெண்ணைக் குறிப்பதெனில் $arg(z) + arg(\bar{z})$ என்பது

(a) $\frac{\pi}{4}$ (b) $\frac{\pi}{2}$ (c) $0$ (d) $-\frac{\pi}{4}$

6) $3 + 2i + (-7 - i)$ இன் திட்ட வடிவம் $(a + ib)$

(a) $4 - i$ (b) $-4 + i$ (c) $4 + i$ (d) $4 + 4i$

7) $y^2 = 12x$ என்ற பரவளையத்தின் குவிநாணின் இறுதிப்புள்ளிகளில் வரையப்படும் தொடுகோடுகள் சந்திக்கும் புள்ளி அமையும் கோடு.

(a) $x - 3 = 0$ (b) $x + 3 = 0$ (c) $y + 3 = 0$ (d) $y - 3 = 0$

8) $16y^2 - 9x^2 = 144$ என்ற அதிபரவளையத்தின் செவ்வகலத்தின் சமன்பாடுகள்

(a) $y = \pm 5$ (b) $x = \pm 5$ (c) $y = \pm\sqrt{5}$ (d) $x = \pm\sqrt{5}$

9) 100 மீ$^2$ பரப்பு கொண்டுள்ள செவ்வகத்தின் மீச்சிறு சுற்றளவு.

(a) 10 (b) 20 (c) 40 (d) 60

10) இடைவெளி **I** -இல் வரையறுக்கப்பட்ட, வகையிடத்தக்க சார்பின் வகைக்கெழுக்கள் மிகை எனில், சார்பு f ஆனது

(a) **I**-யில் ஏறும் சார்பு (b) **I**-யில் இறங்கும் சார்பு (c) **I**-யில் திட்டமாக ஏறும் சார்பு

(d) **I**-யில் திட்டமாக இறங்கும் சார்பு

11) $9y^2 = x^2(4 - x^2)$ என்ற வளைவரை எதற்கு சமச்சீர் ?

(a) y அச்சு (b) X அச்சு (c) $y = x$ (d) இரு அச்சுகள்

12) $U = x^4 + y^3 + 3x^2y^2 + 3x^2y$ எனில் $\frac{\partial u}{\partial x}$ ஆனது

(a) $4x^3 + 6xy^2 + 6xy$ (b) $3x^4 + 6x^2y + 3xy^2$ (c) $4x^3 - 6x^2y + 6xy^2$ (d) $4x^3 + 6x^2y^2 + 3xy$

13) $\int_0^1 x(1-x)^4 dx$ ன் மதிப்பு.

(a) 1/12 (b) 1/30 (c) 1/24 (d) 1/20

14) **x=f (y)** என்ற வளைவரை y -அச்சுடனும் மற்றும் **y=c** மற்றும் **y=d** என்ற கோடுகளால் அடைபடும் பரப்பு y -அச்சுடன் பொறுத்து சுழற்றும் பொது உருவாக்கப்படும் திடப்பொருளின் கன அளவு

(a) $\int_c^d x\, dy$ (b) $-\int_c^d x\, dy$ (c) $\int_c^d y\, dx$ (d) $-\int_c^d y\, dx$

15) $y = e^x(A\cos x + B\sin x)$ என்ற தொடர்பில் A யையும் B யையும் நீக்கிக் கிடைக்கும் வகைக்கெழு சமன்பாடு.

(a) $y_2 + y_1 = 0$ (b) $y_2 - y_1 = 0$ (c) $y_2 - 2y_1 + 2y = 0$ (d) $y_2 - 2y_1 - 2y = 0$

16) மாறத்தக்க மாறிலிகள் {a, b, c} யைக் கொண்ட, $y=ax^2+bx+c$ என்ற சமன்பாட்டின் வகைக்கெழுச் சமன்பாடு

(a) $y'''+y''=0$ (b) $y''=2a$ (c) $y'''=0$ (d) $y'''-y''=0$

17) $(G, .)$ என்ற குலத்தில் $G = \left\{1, \omega, \omega^2\right\}$ இங்கு $\omega$ என்பது 1 இன் முப்படி மூலமெனில் 0(1) என்பது

(a) 2 (b) 1 (c) 4 (d) 3

18) சமனியுடைய அரைக்குலம், குலமாவதற்கு பூர்த்தி செய்ய வேண்டிய விதியாவது

(a) அடைப்பு விதி (b) சேர்ப்பு விதி (c) சமனி விதி (d) எதிர்மறை விதி

19) சரியான கூற்றுகள் எவை ? i) $E(aX+b) = aE(X)+b$ ii) $\mu_2 = \mu_2' - (\mu_1')^2$ iii) $\mu_2$= பரவற்படி iv) $var(aX+b) = a^2 var(X)$

(a) அனைத்தும் (b) (i),(ii),(iii) (c) (ii),(iii) (d) (i),(iv)

20) ஒரு பாய்ஸான் பரவலில் P(X=0)=k எனில் பரவற்படியின் மதிப்பு.

(a) log 1/k (b) log k (c) $e^{\lambda}$ (d) 1/k

## பகுதி-II

7 x 2 = 14

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. **வினா எண் 30க்கு** கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

21) பின்வரும் அணிகளுக்கு சேர்ப்பு அணிகளைக் காண்க $\begin{bmatrix} 2 & 5 & 3 \\ 3 & 1 & 2 \\ 1 & 2 & 1 \end{bmatrix}$

22) $\vec{a} \times \vec{b} = \vec{c} \times \vec{d},\ \vec{a} \times \vec{c} = \vec{b} \times \vec{d}$ எனில் $\vec{a} - \vec{d}$ மற்றும் $\vec{b} - \vec{c}$ இணை வெக்டர்கள் என காண்க.

23) $(1+i)(1+2i)(1+3i)..........(1+ni) = x+iy$ எனில் $2.5.10...\left(1+n^2\right) = x^2+y^2$ என நிறுவுக.

24) பின்வரும் விவரங்களுக்குரிய அதிபரவளையங்களைக் காண்க. குவியங்கள் : $(0, \pm 8)$ ; குறுக்கச்சின் நீளம் 12

25) ஒரலகு நிறையுடைய ஒரு துகள் **t** வினாடி நேரத்தில் ஏற்படுத்தும் இடப்பெயர்ச்சி $x = 3cos(2t-4)$ எனில், **2** வினாடிகளின் முடிவில் அதன் முடுக்கம் மற்றும் அதன் இயக்க ஆற்றல் முதலியவற்றைக் காண்க.$[K.E. = \frac{1}{2}mv^2,$ m is mass]

26) $z = ye^{x^2}$ என்ற சார்பில் $x = 2t$ மற்றும் $y = 1-t$ எனுமாறு இருப்பின் $\frac{dz}{dt}$ காண்க.

27) $y = 2x+4$ என்ற கோடு $y = 1, y = 3$ என்ற கோடுகள் மற்றும் y-அச்சு ஆகியவற்றால் அடைபடும் அரங்கத்தின் பரப்பினைக் காண்க.

28) பின்வரும் வகைகெழுச் சமன்பாட்டினைத் தீர்க்கவும்: $D^2y = -9sin3x$

29) பின்வரும் கூற்றுகளுக்கு மெய் அட்டவணைகள் அமைக்க : $\sim (p \vee q)$

30) ஒரு நிகழ்ச்சியின் வெற்றியின் நிகழ்தகவு p மேலும் தோல்வியின் நிகழ்தகவு q எனில் முதல் வெற்றி பெற சோதனைகளின் எண்ணிக்கையின் எதிர்பார்த்தலைக் காண்க.

## பகுதி-III

7 x 3 = 21

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. **வினா எண் 40க்கு** கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

31) $A = \begin{bmatrix} -4 & -3 & -3 \\ 1 & 0 & 1 \\ 4 & 4 & 3 \end{bmatrix}$-இன் சேர்ப்பு அணி **A** என நிறுவுக.

32) 2x-8y+4z=3 மற்றும் 3x-5y+4z+10=0 என்ற தளங்களில் வெட்டுக்கோடு வழியேச் செல்லக் கூடியது 3x-y-2z-4=0 என்ற தளத்திற்கு செங்குத்தானதுமான தளத்தின் சமன்பாடு காண்க.

33) நிறுவுக : $(1+i)^{4n}$ மற்றும் $(1+i)^{4n+2}$ ; $n \epsilon N$ முறையே மெய் மற்றும் முழுவதும் கற்பனையாகும்.

34) ஒரு புள்ளியானது அப்புள்ளிக்கும் **(5,0)** மற்றும் **(-5,0)** என்ற புள்ளிகளுக்கும் இடையேயான தூரங்களின் வித்தியாசம் **8** ஆக இருக்குமாறு நகருமானால் அப்புள்ளியில் நியமப்பாதை $9x^2 - 16y^2 = 144$ என நிரூபி.

35) பின்வரும் வளைவரைகளுக்குக் கொடுக்கப்பட்ட புள்ளிகளில் தொடுகோடு மற்றும் செங்கோடு ஆகியவற்றின் சமன்பாடுகளைக் காண்க. $y = x - sinx\ cosx;\ x = \frac{\pi}{2}$

36) $u = tan^{-1}(\frac{x}{y})$எனில் $\frac{\partial^2 u}{\partial x \partial y} = \frac{\partial^2 u}{\partial y \partial x}$என்பதை சரிப்பார்க்க.

37) $3ay^2 = x(x-a)^2$ என்ற வளைவரையின் கண்ணியின் பரப்பைக் காண்க.

38) தீர்க்க: $(D^2 + 5D + 6)y = 0$

39) $((\sim p) \vee q) \vee (p \wedge (\sim q))$ஒரு மெய்மையா என்பதனை மெய் அட்டவணையைக் கொண்டு தீர்மானிக்க .

40) கீழே தரப்பட்டுள்ள நிகழ்தகவு அடர்த்திச் சார்புகளுக்கு சராசரியும்,பரவற்படியும் காண்க

$$f(x) = \begin{cases} \alpha e^{-ax} & ,x > 0 \\ 0 & ,otherwise \end{cases}$$

## பகுதி-IV

7 x 5 = 35

அனைத்து கேள்விகளுக்கும் விடையளி :

41) a) பின்வரும் அசமபடித்தான நேரிய சமன்பாட்டுத் தொகுப்பினை அணிக்கோவை முறையில் தீர்க்க: $2x - y + z = 2$ , $6x - 3y + 3z = 6$ , $4x - 2y + 2z = 4$.

**(OR)**

b) பின்வரும் அசமபடித்தான சமன்பாட்டுத் தொகுப்புகளைத் தீர்க்க:
$x + y + 2z = 4$ ; $2x + 2y + 4z = 8$ ; $3x + 3y + 6z = 12$

42) a) ஒரு வெக்டர் $\vec{r}$-இன் எண் அளவு $35\sqrt{2}$ மற்றும் திசை விகிதங்கள் (3, 4, 5) எனில் அந்த வெக்டரின் திசைக்கொசைன்கள் மற்றும் கூறுகளைக் காண்க.

**(OR)**

b) $x^9 + x^5 - x^4 - 1 = 0$ என்ற சமன்பாட்டைத் தீர்க்க.

43) a) $16y^2 - 9x^2 = 144$ என்ற அதிபரவளையத்தின் இயக்குவரைகள், செவ்வகலம் இவற்றின் சமன்பாடுகளையும் நீளங்களையும் காண்க.

**(OR)**

b) ஒரு குளிர் சாதனப் பெட்டியிலிருந்து எடுத்து, கொதிக்கும் நீரில் வைத்த உடன் ஒரு வெப்பமானி $-19^0C$ லிருந்து $100^0C$ ஆக மாற 14 வினாடிகள் எடுத்துக் கொள்கிறது. இடையில் ஏதேனும் ஒரு நேரத்தில் பாதரசம் சரியாக $8.5^0C/sec$ என்ற வீதத்தில் ஏறுகிறது என்று காண்பிக்க.

44) a) x=a cosθ, y=b sinθ என்ற துணையலகு சமன்பாடுகளைக் கொண்ட நீள்வட்டத்திற்கு $\theta = \frac{\pi}{4}$ இல் வரையப்படும் தொடுகோடு, செங்கோடு இவற்றின் சமன்பாடுகளைக் காண்க.

**(OR)**

b) யூலரின் தேற்றத்தைப் பயன்படுத்தி பின்வருவனவற்றை நிரூபிக்க: U என்பது X,Y இல் n-ஆம் படி சமப்படித்தான சார்பாயின் $x\frac{\partial^2 u}{\partial x^2} + y\frac{\partial^2 u}{\partial x \partial y} = (n-1)\frac{\partial u}{\partial x}$ என நிறுவுக.

45) a) $x = a(t + sint), y = a(1 + cost)$ என்ற வட்ட உருள்வளை அதன் அடிப்பக்கத்தைப் ( x-அச்சு ) பொறுத்து சுழற்றுவதால் ஏற்படும் திடப் பொருளின் வளைப்பரப்பைக் காண்க.

**(OR)**

b) பின்வரும் சமன்பாட்டிலிருந்து வகைக்கெழுச் சமன்பாடுகளை அமைக்க : $Ax^2 + By^2 = 1$

46) a) இரட்டை மிகை முழு எண்கள் வழக்கமான கூட்டல் மற்றும் பெருக்கலின் கீழ் ஒரு அரைக்குலம் எனக் காட்டுக. மேற்கண்ட ஒவ்வொரு செயலின் கீழும் அது சமனியுடைய அரைகுலமாகுமா?

**(OR)**

b) ஒரு பேருந்து நிலையத்தில் ஒரு நிமிடத்திற்கு உள்ளே வரும் பேருந்துகளின் எண்ணிக்கை பாய்ஸான் பரவலைப் பெற்றிருக்கிறது எனில் $\lambda$= 0.9, எனக் கொண்டு

i. 5 நிமிட கால இடைவெளியில் சரியாக 9 பேருந்துகள் உள்ளே வர

ii 8 நிமிட கால இடைவெளியில் 10க்கும் குறைவான பேருந்துகள் உள்ளே வர

iii 11 நிமிட கால இடைவெளியில் குறைந்தபட்சம் 14 பேருந்துகள் உள்ளே வர நிகழ்தகவு காண்க.

47) a) தீர்க்க:$(D^2 + 5D + 4)y = \sin 5x$

**(OR)**

b) $\begin{pmatrix} x & x \\ x & x \end{pmatrix}; x \in R - \{0\}$என்ற அமைப்பில் உள்ள அணிகள் யாவும் அடங்கிய கணம் Gஆனது அணிப்பெருக்கலின் கீழ் ஒரு குலம் எனக் காட்டுக.

*******************************************